# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

### சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தகுதிவாய்ந்த, துல்லியமான, சுய ஊக்கமும் மற்றும் தொழில் அபிலாஷையும் உடைய, அணியாகப் பணியாற்றும் பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் இருந்து SPMC தாபனத்தில் உள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு விண்ணப்பங்களை கோருகின்றது.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் அலுவலக பணிகளை நிறைவேற்றுவதற்கும், தீவில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும் உடலியல் மற்றும் உளவியல் ரீதியில் பொருத்தமானவர்களாக இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

1. **பிரதிப் பொது முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு (HM 1-1)**

**அலுவலகக் கடமைகள்:**

தரக் கட்டுப்பாட்டு பிரிவின் தலைவராக இருப்பதுடன் தரக் கட்டுப்பாடு தொடர்பான எல்லா விடயங்களிலும் தலைவருக்கு/முகாமைத்துவ பணிப்பாளருக்கும் மற்றும் பொது முகாமையாளருக்கும் பொறுப்புக்கூறக்கூடியவராகவும் இருத்தல். அத்தகைய விடயங்கள் பின்வருமாறு காணப்படும்.

1. ஆய்வுகூடப் பதவியணியின் பணியை ஒழுங்கமைத்து மேற்பார்வை செய்தல்.
2. விநியோகத்திற்கான சகல மருந்து கூறுகளையும், மருந்து உற்பத்தி கொள்கலன்களையும்,மூடுசாதனங்களையும்,

தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பொருட்களையும், பொதியிடும் பொருட்களையும், சுட்டுத்துண்டுகள் மற்றும் முடிவு மருந்து பொருட்களையும் அனுமதிக்கும் அல்லது நிராகரிக்கும் பொறுப்பும் அதிகாரமும்.

3. மருந்து உற்பத்திகளின் உறுதித்தன்மையை கண்காணித்து பாவனை காலம் முழுதிலும் தரத்தை உறுதிசெய்தல், WHO நிறுவனத்தின் தற்போதைய சிறந்த உற்பத்தி செயன்முறைகளை (cGMP) அனுசரிக்கப்படுவதை கண்காணித்தல்.
4. கொள்வனவு செய்ய வேண்டிய ஆரம்ப மூலப்பொருட்களுக்கும், பொதியிடும் பொருட்களுக்கும் உரிய தகவுதிறன்களை அங்கீகரித்தல்.
5. உற்பத்தி தளத்தில் நிகழும் cGMP ஐ மேற்பார்வை செய்தல் மற்றும் உற்பத்தி செயற்பாட்டில் SOP அனுசரிக்கப்படுகின்றதா என்பதை கண்காணித்தல்.
6. நீரின் தரத்தை உறுதிசெய்து கழிவு முறைமையை கண்காணித்தல்.
7. சந்தையில் உள்ள போட்டித்தரப்புகளின் உற்பத்தியின் தரத்தை கண்காணித்து எமது உற்பத்திகளுடன் ஒத்தீடுசெய்தல். தேவையாயின் எமது உற்பத்திகளை மேம்படுத்த சிபாரிசுகளை முன்வைத்தல்.
8. சந்தை தொடர்பான ஏதாவது முறைப்பாடு இருந்தால் சரியான பொருத்தமான நடவடிக்கையை எடுத்தல்.
9. பகுப்பாய்வு நடைமுறைகள் அடங்கலாக பொருத்தமான செல்லுபடியாகுதல்கள் மற்றும் உபகரணங்களின் அளவுத்திருத்தம் தொடர்பான கட்டுப்பாடு ஆகியன மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்தல்.
10. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடனும் அரச சாரா அமைப்புகளுடனும் தொடர்புகளை பேணுதல்.
11. மருந்துகள் உற்பத்திப் பிரிவில் cGMP ஐ நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் கண்காணித்தல் அத்துடன் SPMC இன் தர முகாமைத்துவ முறைமையை அனுசரித்து நடத்தல்.

**தகைமைகள்**:

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**(அ)** (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் இரசாயனவியல் பாடம் உள்ளடங்கிய BSc பொது பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான இரசாயனவியல் பாடத்தில் BSc விஷேட பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான இரசாயனவியல் பாடம் உள்ளடங்கிய BSc பொது பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**(ஆ)** (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்வு இரசாயனவியல் அல்லது வேறு ஏதாவது விஞ்ஞானப் பரிசோதனை / மருந்துகள் பகுப்பாய்வு பிரிவுக்கு பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டத்தை (முதுமாணி) பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) இரசாயனவியல் நிறுவகத்தில் கூட்டு உறுப்புரிமையை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**(இ)** குறித்த தகுதியை பெற்றதன் பின்னர் ஒரு அரச நிறுவனத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் விஞ்ஞான மதிப்பீட்டு / ஆய்வுகூடப் பரிசோதனை / மருந்துகள் உற்பத்தி பிரிவுக்கு பொருத்தமான முகாமைத்துவ மட்டப் பதவியில் குறைந்தது 12 ஆண்டு கால சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

பதவிக்கு பொருத்தமான விடயப் பிரிவில் முகாமையாளர் வகுதி (MM 1-1) தரம் I இல் குறைந்தது இரண்டு (2) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

- **சம்பள அளவுத்திட்டம்**: HM 1-1 - ரூ. [140,640 - 15x 4,100 = 202,140]

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 140,640/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 123,019/= ஆகும்**).

மேலே குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**வயӀ**: 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை**: கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**ஏனைய நன்மைகள்:**

- PED 1/2015(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வழங்கும் அலுவலக வாகனம் அல்லது சொந்த வாகனத்திற்கான கொடுப்பனவுகள்
- எரிபொருள் கொடுப்பனவு (ஒரு மாதத்திற்கு 120 லீற்றர் டீசல் அல்லது பெற்றோல்)

## 2. பிரதிப் பொது முகாமையாளர் – உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி (HM 1-1)

**அலுவலகக் கடமைகள்**:

உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவின் தலைவராக இருப்பதுடன் SPMC தாபனத்தின் தயாரித்தல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பணியுடன் தொடர்பான எல்லா விடயங்களிலும் தலைவருக்கு/முகாமைத்துவ பணிப்பாளருக்கு மற்றும் பொது முகாமையாளருக்கு பொறுப்புக்கூறக்கூடியவராக இருத்தல். அத்தகைய விடயங்கள் பின்வருமாறு காணப்படும்.

1. புதிய உற்பத்திகளைத் தயாரித்தல், முறையியலை அபிவிருத்தி செய்தல் மற்றும் செல்லுபடியாகுதல்கள் என்பன தொடர்பாக கீழ்நிலை பதவியணியினருக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.
2. புதிய உற்பத்திகளைப் பதிவுசெய்வதற்கு வழிகாட்டுதல்.
3. உற்பத்தி அளவுத்திட்டம் மற்றும் செயல்முறைப்படுத்தல் செல்லுபடியாகுதல் ஆகியவற்றை படிப்படியாக அதிகரித்தல்
4. செயல்முறைப்படுத்தல் மேம்பாடுகள், தர மேம்பாடுகள், உற்பத்தி மேம்பாடுகள் தொடர்பாக தொழில்நுட்ப ஆலோசனையை வழங்குதல்.
5. ஆரம்ப மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதில் கருத்திற்கொள்ள வேண்டிய தரம் சார்ந்த தகவுதிறன்களை நிர்ணயித்தல்.
6. உற்பத்தியில் இடைக்கிடை நிகழும் உற்பத்தி சார்ந்த பிரச்சினைகளையும் மற்றும் ஏற்கனவேயுள்ள உற்பத்திகளுடன் சம்பந்தப்படும் பிரச்சினைகளையும் தீர்ப்பது தொடர்பான ஆலோசனையையும் மற்றும் தீர்வுகளையும் வழங்குதல்.
7. திணைக்களத்தின் அபிவிருத்தித் திட்டங்களை மதிப்பீடு செய்து கருத்திற் கொள்ளப்படுவதற்காகவும் அங்கீகாரத்திற்காகவும் பொது முகாமையாளருக்கு சமர்ப்பித்தல்.
8. உற்பத்தி அபிவிருத்தியுடனும் மேம்பாடுகளுடனும் இணைந்த ஆராய்ச்சி சார்ந்த கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
9. தேவையான போதெல்லாம் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மருத்துவ பரிசோதனைகளை/உயிரியல் கிடைப்புத்தன்மை ஆய்வுகளை முன்னெடுத்தல்.

10. மருந்துகள் உற்பத்திப் பிரிவில் cGMP ஐ நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் கண்காணித்தல் அத்துடன் SPMC இன் தர முகாமைத்துவ முறைமையை அனுசரித்து நடத்தல்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**(அ)** (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் இரசாயனவியல் பாடம் உள்ளடங்கிய BSc பொதுப் பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான இரசாயனவியல் பாடத்தில் BSc விஷேட பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான இரசாயனவியல் பாடம் உள்ளடங்கிய BSc பொதுப் பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**(ஆ)** (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்வு இரசாயனவியல் அல்லது வேறு ஏதாவது விஞ்ஞானப் பரிசோதனை / மருந்துகள் பகுப்பாய்வு பிரிவுக்கு பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டத்தை (முதுமாணி) பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) இரசாயனவியல் நிறுவகத்தில் கூட்டு உறுப்புரிமையை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**(இ)** குறித்த தகுதியை பெற்றதன் பின்னர் ஒரு அரச நிறுவனத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில்

விஞ்ஞான மதிப்பீட்டு / ஆய்வுகூடப் பரிசோதனை / மருந்துகள் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி / உணவுகள் பிரிவுக்கு பொருத்தமான முகாமைத்துவ மட்டப் பதவியில் குறைந்தது 12 ஆண்டு கால சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

பதவிக்கு பொருத்தமான விடயப் பிரிவில் முகாமையாளர் வகுதி (MM 1-1) தரம் I இல் குறைந்தது இரண்டு (2) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்**: HM 1-1- **ரூ.** [140,640 - 15x 4,100 = 202,140/=]

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி> 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 140,640/= வழங்கப்படும் vd;gJld; **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 123,019/= ஆகும்**).

மேலே குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**வயது**: 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை**: கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**ஏனைய நன்மைகள்:**

- PED 1/2015(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வழங்கும் அலுவலக வாகனம் அல்லது சொந்த வாகனத்திற்கான கொடுப்பனவுகள்
- எரிபொருள் கொடுப்பனவு (ஒரு மாதத்திற்கு 120 லீற்றர் டீசல் அல்லது பெற்றோல்)

**3. முகாமையாளர் சந்தைப்படுத்தல் (MM 1-1 juk; II)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

(m) (I) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம்/வர்த்தகம்/சந்தைப்படுத்தல்/வியாபார முகாமைத்துவம் துறையில் இளமாணி பட்டம்

அல்லது

(II) அதற்கு சமமானதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தில்/நிறுவனத்தில் பெறப்பட்ட பட்டம்

மற்றும்;

(ஆ) கணினி அறிவு

மற்றும்

(இ) ஒரு அரசாங்க திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு பிரசித்த வணிக ஸ்தாபனத்தில் விற்பனை அல்லது சந்தைப்படுத்தல் பிரிவில் பதவிக்குப் பின்னர் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமைகளை கொண்டிருத்தல்
2. பதவிற்குப் பின்னர் குறித்த பதவிற்குரிய விடயப்பரப்பில் ‘கனிஸ்ட முகாமையாளர் ’ பதவி (JM 1-1) தரம் II இல் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்**: MM 1-1- &. [91,690 – 10 x 2,480 -15 X 3,450 = 168,240]

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 91,690/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 81,710/= ஆகும்**).

மேலே குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**வயது**: 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை**: எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**4. இரசாயனவியலாளர் - (JM 1-1 - தரம் II)**

**தகைமைகள்:**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள இரசாயனவியலை அல்லது மருந்தகவியலை ஒரு பாடமாக உள்ளடக்கிய ஒரு விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு:** பகுப்பாய்வு இரசாயனவியல் பின்னணியை கொண்டிருத்தல் ஒரு மேலதிகத் தகைமையாக கருதப்படும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.
2. பதவிக்கு பின்னர் குறித்த பதவிக்குரிய விடயப்பரப்பில் 'முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல்' பதவி (MA 2- 1) தரம் II இல் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

- **சம்பள அளவுத்திட்டம்**: JM 1-1 ரூ. [72,650 – 10 x 1,360 - 18 x 2,040= 122,970]

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 72,650/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 65,633/= ஆகும்**).

- **வயதெல்லை**: 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.
- **ஆட்சேர்ப்பு முறை**: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

## 5. போக்குவரத்து உத்தியோகத்தர்- (JM 1-1 -தரம் II)

**தகைமைகள்:**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் எந்திர/வாகன பொறியியலில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(M) மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனம் வழங்கும் 7 ஆம் மட்ட NVQ தகைமைக்கு இணையான எந்திர/வாகன பொறியியல் பாடநெறி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(இ) மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனம் வழங்கும் 6 ஆம் NVQ தகைமைக்கு இணையான எந்திர/வாகன பொறியியல் பாடநெறி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

ஒரு அரசாங்க திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு பிரசித்த வணிக ஸ்தாபனத்தில் மோட்டார் போக்குவரத்து வாகனத் தொகுதியில் தொழில்நுட்ப மற்றும் நிருவாக முகாமைத்துவப் பிரிவில் பதவிக்குப் பின்னர் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(<) மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனம் வழங்கும் 5 ஆம் மட்ட NVQ தகைமைக்கு இணையான எந்திர/வாகன பொறியியல் பாடநெறி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிற்குப் பின்னர் ஒரு அரசாங்க திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு பிரசித்த வணிக ஸ்தாபனத்தில் மோட்டார் போக்குவரத்து வாகனத் தொகுதி மேற்பார்வையாளர் பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால சேவை அனுபவத்தையும் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து வாகனத்தொகுதி பராமரிப்பில் தொழில்நுட்ப மற்றும் நிருவாகப் பிரிவில் ஆகக்குறைந்தது பத்து (10) ஆண்டு கால சேவை அனுபவத்தையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

(c) கணணி அறிவைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 )**

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.

2. பதவிற்குப் பின்னர் குறித்த பதவிற்குரிய விடயப்பரப்பில் 'முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல்' பதவி (MA 2- 1) தரம் II இல் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

- **சம்பள அளவுத்திட்டம்**: JM 1-1 ரூ. [72,650 – 10 x 1,360 - 18 x 2,040= 122,970] (MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 72,650/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 65,633/= ஆகும்**).

- **வயதெல்லை**: 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை**: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

6. **தொழில்நுட்ப உதவியாளர் – உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (MA - 2-1- தரம் III)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - கீழுள்ள** (அ),(ஆ) **அல்லது** (இ)

(அ) மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மருந்தாக்கல் தொடர்பாக வழங்குகின்ற 5 ஆம் மட்டத் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைக்கு குறையாத ஒரு தகுதி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**(ஆ)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 04 திறமைச்சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் ஒரு திறமைச்சித்தி அடங்கலாக 2 திறமைச்சித்திகளுடன் குறித்த பதவிற்குரிய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப பாடங்களில் மூன்று சித்திகளை (பொது வினாத்தாள் தவிர்ந்த) பெற்றிருத்தல்.

அத்துடன்

(iii)ஆறு மாதங்களுக்குக் குறையாத கால கணனிப் பாடநெறி சான்றிதழைப் பெற்று இருத்தல் ஒரு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

அத்துடன்

(IV) ஒரு பிரசித்த ஆய்வுகூடத்தில் ஆகக்குறைந்தது இரண்டு (2) ஆண்டு கால பகுப்பாய்வு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(இ) **பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு**

மேற்குறித்த (M) (i), (ii), (iii) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய நபர்களை பயிலுநராக ஆட்சேர்த்துக்கொள்ளல்

SPMC நிறுவனத்தில் ஒரு பயிலுநர் தொழில்நுட்பவியலாளராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்திருத்தலும் மற்றும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தலும்

நிரந்தர ஆளணயில் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவராக உள்ளீர்க்கப்படுவதற்கான முற்-தேவைப்பாடுகளாகும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**:

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.

- ***சம்பள அளவுத்திட்டம்:*** MA 2-1 : ரூ. [50,540 – 10 x 540 – 7 x 630 – 4 x 890 – 20 x 1,190=87,710]
  (MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 50,540/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 46,960/= ஆகும்**).

- **வயது:** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை**: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**7. *தர உத்தரவாத உதவியாளர் - (MA 2-1 - தரம் III)***

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - கீழுள்ள (அ),(ஆ) அல்லது (இ)**

**(அ)** மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மருந்தாக்கல் தொடர்பாக வழங்குகின்ற 5 ஆம் மட்டத் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைக்கு குறையாத ஒரு தகுதி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**(ஆ)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 04 திறமைச்சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் ஒரு திறமைச்சித்தி அடங்கலாக 2 திறமைச்சித்திகளுடன் குறித்த பதவிக்குரிய விஞ்ஞான அல்லது

தொழில்நுட்ப பாடங்களில் மூன்று சித்திகளை (பொது வினாத்தாள் தவிர்ந்த) பெற்றிருத்தல்.

அத்துடன்

(iii) ஆறு மாதங்களுக்குக் குறையாத கால கணனிப் பாடநெறி சான்றிதழைப் பெற்று இருத்தல் ஒரு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

அத்துடன்

(iv) ஒரு பிரசித்த மருந்தாக்கல்/உணவு உற்பத்தி நிலையத்தில் தர உத்தரவாதப் பிரிவுக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது இரண்டு (2) ஆண்டு கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**(இ) பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு**

மேற்குறித்த (M) (i), (ii), (iii) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய நபர்களை பயிலுநராக ஆட்சேர்த்துக்கொள்ளல்

SPMC நிறுவனத்தில் ஒரு பயிலுநர் தர உத்தரவாத உதவியாளராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்திருத்தலும் மற்றும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தலும் நிரந்தர ஆளணியில் தர உத்தரவாத உதவியாளர் ஒருவராக உள்ளீர்க்கப்படுவதற்கான முற்-தேவைப்பாடுகளாகும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்:**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.

- **சம்பள அளவுத்திட்டம்:** MA 2-1 : ரூ. [50,540 – 10 x 540 – 7 x 630 – 4 x 890 – 20 x 1,190=87,710]

  (MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 50,540/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 46,960/= ஆகும்**).

- **வயது**: 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை**: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

8. **மருந்தாக்க முழுமைப்படுத்தல் உதவியாள் பதவி** - (PL-2-**தரம்** III)

**தகைமைகள்:-**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1, 2, அல்லது 3)**

(1) மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்து பொதியிடுதல் சம்பந்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 2 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

(2) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நான்கு (04) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

மருந்துகள் பொதியிடுவதில் ஓராண்டு அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

(3) **பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்:-**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நான்கு (04) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்க முழுமைப்படுத்தல் உதவியாள் பயிலுநராக உள்ளக பயிற்சி காலத்தில் ஓராண்டு பயிற்சியை நிறைவு செய்தவர்கள் மருந்தாக்க முழுமைப்படுத்தல் உதவியாளராக நிரந்தர ஆளணியில் உள்ளீர்க்கப்படுவார்கள்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

2. தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சி மட்டம் 2 இற்கு குறையாத திறமைகளுடன் ஒரு செயன்முறை பரீட்சையில் நிரூபித்து உரிய துறையில் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டு கால தொழில் அனுபவத்தையுடைய அரைத்-தேர்ச்சி மட்டத்திலுள்ள ஊழியர்கள் இந்த பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

- **சம்பள அளவுத்திட்டம்:-** PL-2-(ரூ.42,300/=-10x490-10x540-10x590-12x630= 66,060/=)

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 42,300/= அடிப்படை சம்பளம் செலுத்தப்படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 40,008/= ஆகும்**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**எல்லா பதவிகளுக்குமான ஏனைய நன்மைகள்:**

- வரவு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புத்தொகை
- பயன்படுத்தாத வருடாந்த மற்றும் சுகயீன லீவுகளுக்கு பணம் கிடைத்தல்
- மருத்துவக் காப்புறுதி கிடைத்தல் மற்றும் மருத்துவச் செலவுகள் மீளளிப்பு
- EPFஇற்கு சம்பளத்தின் 15% வீதம் கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல் மற்றும் 10% வீதம் ஊழியர்களால் பங்களிக்கப்படுதல்
- ETFஇற்கு சம்பளத்தில் 3% கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல்.
- 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்திற்கும், MSD சுற்றறிக்கைக்கும் இணங்க பணிக்கொடை செலுத்தப்படுதல்
- மேலும் ஏனைய நன்மைகள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்:**

- குறித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பங்கள் உறவினர் சாராத இரண்டு நடுவர்களின் பெயர்களையும், முகவரிகளையும் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். எல்லாக் கல்வி சான்றிதழ்களினதும் சான்றுபடுத்தப்பட்டுள்ள பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் **https://www.spmc.gov.lk** என்ற இணையத்தளத்திலிருந்து கீழிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

- அரசாங்கத் திணைக்களங்களிலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள், இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அதற்கான நியமனத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதை சான்றுபடுத்த வேண்டிய தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

- விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு கீழ்காணும் முகவரிக்கு இந்த விளம்பரத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
- மேற்குறித்த தேவைப்பாடுகளை அனுசரிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்**
இலக்கம் 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை
கந்தவெல தோட்டம் – இரத்மலான.
22.02.2026